
# திராவிடத்தால் வாழ்கிறோம்

865

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

தமிழ்.கா.அமுதரசன்

8

**கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுப் பூர்வமாக விவரிக்கும் தொடர்!**

# ஆதிக்கத்தைத் தகர்த்த நில உச்சவரம்புச் சட்டம்!

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்துக்கு முன்பும், பின்பும் இந்தியாவில் நிலவுடைமை ஆதிக்கம் என்பது பார்ப்பனர்கள் மற்றும் சாதி படி நிலையில் மேல் அடுக்கில் இருந்தவர்களிடம்தான் இருந்தது. பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களிடம் நில உரிமை தடைசெய்யப்பட்டிருந்தது. தடை செய்து வைத்திருந்தது இங்கு கோலோச்சிக் கொண்டிருந்த சனாதனச் சிந்தனை. கல்வி, வேலைவாய்ப்புகளில் மறுக்கப்பட்ட உரிமை போல, நிலவுடைமையும் மறுக்கப்பட்டிருந்தது.

இருபதாம் நூற்றாண்டின் சமூகநீதி அரசியல் வளர்ச்சி, ஒடுக்கப்பட்ட மக்களின் நில உரிமைக்கும் குரல் கொடுத்தது. ‘உழுபவர்களுக்கே நிலம்’ என்கிற உரிமைக் குரல்கள் எல்லாம் எழுந்தன. இந்திய விடுதலைக்குப் பின்னர், காங்கிரஸ் அந்த உரிமைக் குரல்களுக்குச் செவி சாய்க்க வேண்டிய கட்டாயம் உருவானது. ஜமீன்தாரி முறை ஒழிப்புச் சட்டத்தினைக் கொண்டு வந்து, நிலச்சுவான்தார்களின் நிலங்களை அரசு கைப்பற்றி, விவசாயிகளுக்குப் பகிர்ந்து அளித்து வந்தது.

### அறக்கட்டளைகளுக்கு நிலம்

1950-களில், காங்கிரஸ் ஆண்ட பெரும்பாலான மாநிலங்களில் ஜமீன்தாரி ஒழிப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அதன்மூலம் பெரும் நிலவுடைமையாளர்களுக்கு நில உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், தமிழ்நாட்டில், நில உச்சவரம்புச் சட்டம் அமலாக 1947-க்கு பின்னர் 13 ஆண்டுகள் காத்திருக்க வேண்டியிருந்தது. அந்தக் காத்திருத்தலும் இறுதியில் பெரும் ஏமாற்றத்தில்தான் முடிந்தது.

1961-ஆம் ஆண்டு காமராஜர் ஆட்சிக்காலத்தில் கொண்டுவரப்பட்டது. ஆனால், அதற்கு முன்னரே நில உச்சவரம்புச் சட்டம் வரப்போகிறது என்கிற எச்சரிக்கைகளால், தமிழ்நாட்டின் பெரும் நிலவுடைமையாளர்கள் சுதாரித்துக் கொண்டு, தங்களிடமிருந்த ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை விற்பனை செய்ததுடன், தங்கள் உறவினர்கள் பலரது பெயரிலும் உரிமை மாற்றம் செய்து அனுபவிக்கத் தொடங்கினர். சில பெரும் நிலக்கிழார்கள் ‘டிரஸ்ட்’களை உருவாக்கி, அந்த டிரஸ்ட் பெயரில் நிலங்களை எழுதி வைத்து, டிரஸ்டியாக தங்களை நியமித்துக் கொண்டு, நில உரிமை தங்கள் கையை விட்டுப் போகாமல் பார்த்துக் கொண்டனர்.

இந்தப் போக்குகளுக்கு எதிராக, குத்தகை தாரர்களோடும், நிலமற்ற கூலி விவசாயிகளோடும் சேர்ந்து குரல் கொடுத்த இயக்கமாக கழகம் இருந்தது. 1957-ஆம் ஆண்டில், குளித்தலையில் கலைஞர் முன்னெடுத்த நங்கவரம் விவசாயிகள் போராட்டம் மிக முக்கிய சான்றாகும். சட்டமன்றத்தில் நில உடைமை ஆதிக்கத்துக்கு எதிராக கலைஞர் கொடுத்த குரல், கழகத்தின் குரலாக நில உடைமையாளர்களுக்கு அச்சத்தைக் கொடுத்திருந்தது.

1959-ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம் 7 மற்றும் 8 தேதிகளில் புதுக்கோட்டையில் நடைபெற்ற கழகத்தின் செயற்குழு, பொதுக்குழுக் கூட்டம், இதுதொடர்பாக கண்டனத் தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறது.

‘உழுபவனுக்கே நிலம் சொந்தமாக வேண்டும்; நிலப்பிரபுத்துவ முறை ஒழிந்தாக வேண்டும்; நில உச்சவரம்பு கொண்டுவரப்பட வேண்டும்’ என்பதை அன்றைக்கு அழுத்தமாக வலியுறுத்திய கட்சி கழகம்தான். முக்கியமாக, நிலச் சீர்திருத்தத்தை எப்படிச் செயல்படுத்த வேண்டும், தமிழ்நாட்டில் கூட்டுப்பண்ணை முறையைச் செயல்படுத்தும் சாத்தியம் ஆகியவற்றினை ஆராயவும், அன்றைக்கு கழகம் முயற்சிகளை எடுத்திருந்தது.

ஆனால், 1961-ஆம் ஆண்டு காமராஜர் செயல்படுத்திய நில உச்சவரம்புச் சட்டம் நில உடைமையாளர்கள் மீது சிறு கீறலைக்கூட ஏற்படுத்தவில்லை. 5 பேர் கொண்ட குடும்பத்துக்கு 30 ஏக்கர் (standard) என நிர்ணயிக்கப்பட்டது. அதிலும் பல விதிவிலக்குகள் அளிக்கப்பட்டிருந்தன. அதனால், கூட்டுக் குடும்பமாக இருந்த, பண்ணையாளர்கள் பலரும் தனித்தனிக் குடும்பமாக கணக்கிட்டு நில உரிமை கைவிட்டுப் போகாமல் பார்த்துக் கொண்டனர்.

### நில மிச்ச வரம்பு!

உதாரணமாக; 1959-ஆம் ஆண்டு கபிஸ்தலம் பண்ணையின் மொத்த நில அளவு 2,028 ஏக்கர். அதில் 1,464 ஏக்கரைப் பிரித்து விற்பனை செய்துவிட்டார். மீதமிருந்த 389 ஏக்கர் தரிசு நிலம் என்று அறிவிக்கப்பட்டு விட்டது. 125 ஏக்கர் அறக்கட்டளை நிலமாக மாற்றப்படுகிறது. அதன்பின்னர் 30 ஏக்கர் ஸ்டாண்டர்டு நில உச்ச வரம்பு சட்டத்தால் கபிஸ்தலம் பண்ணையாரிடம் இருந்து அரசுக்கு உபரியாகக் கிடைத்தது 4 ஏக்கர் 84 சென்ட் மட்டுமே. அதேபோல பூண்டிப் பண்ணையின் மொத்த நில அளவு 4,000 ஏக்கர். ஆனால், நில உச்சவரம்புச் சட்டத்தில் அரசுக்கு உபரியாகக் கிடைத்த நிலம் 48 ஏக்கர் மட்டும்தான். இதேபோன்ற வழியைத்தான் அனைத்து பண்ணையார்களும் பின்பற்றினார்கள். இந்தப் போக்கினைக் கண்டித்த பேரறிஞர் அண்ணா; இதை நில உச்சவரம்புச் சட்டம் என்று கூறக்கூடாது. நில ‘மிச்ச வரம்புச் சட்டம்’ என்று விமர்சனம் செய்தார்.

இந்திய சமூகத்தில் நில உடைமை என்பது சாதி ஆதிக்கத்துக்கும் வழி வகுப்பதை, அண்ணல் அம்பேத்கர் முதல் முத்தமிழறிஞர் கலைஞர் வரை சமூகநீதிக் கண்ணோட்டத்தில் ஆராய்ந்துள்ளனர், விமர்சித்துள்ளனர். சாதியும், நில உடைமையும் இரட்டைச் சுவர் போல ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொண்டு இருக்கின்றன. இதை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு, மக்களோடு மக்களாக நின்று, போராடி வந்த கழகம், 1967-ஆம் ஆண்டு ஆட்சி அதிகாரத்துக்கு வந்ததும் சம்மட்டி அடி அடித்தது.

1970-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் யாரும் எதிர்பாராத வகையில், புதிய நில உச்சவரம்புச் சட்டம் செயல்பாட்டுக்கு வர உள்ளதாக அறிவித்தார் அன்றைய முதல்வர் நம் முத்தமிழறிஞர். இயற்றப்பட்டது சட்டம் அல்ல, பேரிடி.




நூற்றாண்டுகால ஆண்டான் அடிமைத் தனத்தை முடிவுகட்ட கலைஞர் இறக்கிய பேரிடி. அன்று அவர் அறிவித்த சட்டத்தில் 30 ஸ்டண்டார்டு ஏக்கர் உச்ச வரம்பு என்பதை, 15 ஏக்கராகக் குறைத்தார் கலைஞர். 1961-ஆம் ஆண்டு கொடுக்கப்பட்ட பல விதிவிலக்குகளையும் அன்று ரத்து செய்திருந்தார் கலைஞர். முன்கூட்டி சொல்லப்படவில்லை என்பதால், பண்ணைகள் சுதாரித்துக்கொள்ள வழி இல்லை.

பண்ணையார்கள், நிலக்கிழார்கள், மடாதிபதிகளிடம் இருந்த ஒரு லட்சத்து 8 ஆயிரத்து 68 ஏக்கர் உபரி நிலங்களாக அறிவிக்கப்பட்டன. அதில் 88 ஆயிரத்து 146 ஏக்கரை அரசு உடனடியாகக் கையகப்படுத்தியது. நங்கவரம் போராட்டத்தில் விவசாயக் கூலித் தொழிலாளர்களுடன் தோளோடு தோளாக நின்ற கலைஞர், முதலமைச்சராகி அவர்களின் துயர்களைத் துடைக்க முயன்றார். கலைஞரின் சட்டத்துக்கு எதிராக பண்ணயாளர்கள் உச்சநீதிமன்றத்தின் கதவுகளைத் தட்டினர்.

> “ நங்கவரம் போராட்டத்தில் விவசாயக் கூலித் தொழிலாளர்களுடன் தோளோடு தோளாக நின்ற கலைஞர், முதலமைச்சராகி அவர்களின் துயர்களைத் துடைக்க முயன்றார். ”

...தொடரும்

## இனத் துரோகிகளாக மாறும் எதிர்க்கட்சிகள்!

வழக்குகளில் இருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, பா.ஜ.க. கூட்டணியில் இருக்கும் தமிழ்நாட்டு எதிர்க்கட்சிகள், தமிழர் உரிமைகளை பலிகடாவாக்கி, இனத்துரோகிகளாக மாறிக் கொண்டிருப்பதாக திராவிடர் விடுதலைக் கழகத்தின் பொதுச் செயலாளர் ‘விடுதலை’ இராசேந்திரன் பதிவிட்டுள்ளார்.

இதுதொடர்பாக, தனது சமூக வலைதளப் பக்கங்களில் பதிவிட்டுள்ள அவர், “தமிழர்களுக்காகப் போராடி சிறைசென்று தியாகத் தழும்புகளை ஏற்ற 2 தலைவர்கள் தமிழ்நாட்டைக் காப்பாற்ற, இப்போது களம் இறங்கி இருக்கிறார்கள். அந்த இரண்டு தலைவர்கள் யார் தெரியுமா? ஒருவர் அமித் ஷா, மற்றொருவர் ஆடிட்டர் குருமூர்த்தி.

‘நீங்கள் வந்துதான் எங்களைக் காப்பாற்ற வேண்டும்’ என்று பச்சைக்கொடி காட்டிக்கொண்டு, அந்த இருவரிடமும் சென்று நிற்கின்றன சில அரசியல் கட்சிகள். உள்துறை அமைச்சராக இருந்த அத்வானியை மறதி மனநோய்க்காரர், அவருக்கு ‘செலக்ட்டிவ் அம்னீசியா’ என்று கூறிய ஜெயலலிதாவின் அ.தி.மு.க. தொண்டர்களை ஒன்றாக இணைக்க வேண்டுமென்று, அமித் ஷாவிடம் மனு போட்டிருக்கிறார் டி.டி.வி.தினகரன். இன்னொருபுறம், தமிழ்நாட்டில் அமையப் போவது பா.ஜ.க. கூட்டணி ஆட்சிதான் என்று அடித்துச்சொல்லி எடப்பாடியை வாய் மூட வைத்து விட்டார் அமித் ஷா. ‘அ.தி.மு.க. ஆட்சி’தான் அமையப்போகிறது என்று சொன்னால், என்ன நடக்கும் என்பதைப் புரிந்துகொள் என்று எச்சரிக்கும் விதமாக இருக்கிறது, அமித் ஷாவின் மதுரை பேச்சு.

அதேபோல, பார்ப்பனர்களைக் கட்சியிலே சேர்க்க மாட்டோம் என்று சொன்ன மருத்துவர் ராமதாஸ், ஆடிட்டர் குருமூர்த்தியிடம் ரகசியப் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறார். பத்திரிகையாளர்களிடம் துப்பறியும் நாவலைப் போல் விறுவிறுப்பான கதைகளைப் பேட்டியாக அளித்துக் கொண்டிருக்கிறார். தமிழ்நாட்டு அரசியலை, பார்ப்பனர்களிடமும் பனியாக்களிடமும் ஒப்படைத்து விட்டு, வழக்குகளில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக தமிழர் உரிமைகளை பலிகடாவாக்கத் துடிக்கின்றன இனத்துரோக சக்திகள். தமிழ்நாட்டு மக்கள் இந்த துரோகங்களை உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்” எனப் பதிவிட்டுள்ளார்.

## ப்ளாஷ்பேக்



## முத்தமிழறிஞரிடம் பிறந்தநாள் வாழ்த்து!



‘திராவிடன்’ வ.வசந்தகுமார்

26.04.1998 அன்று அன்றைய முதலமைச்சர் கழகத் தலைவர் முத்தமிழறிஞர் அவர்களை, என் பிறந்தநாளை முன்னிட்டு நேரில் சந்தித்து, வாழ்த்துப் பெற விரும்பினேன். அண்ணா அறிவாலயம் சென்று பொன்னாடை வழங்கி, தலைவர் கலைஞர் அவர்களிடம் வாழ்த்துப் பெற்றேன். அப்போது எடுக்கப்பட்ட புகைப்படம் இது, உடன் முன்னாள் கழகப் பொருளாளர் ஆற்காட்டார், ஒருங்கிணைந்த கோவை மாவட்டச் செயலாளர் அருண்குமார் மற்றும் நகரச் செயலாளர் இரா.மனோகரன் இடம் பெற்றுள்ளனர்.

**– ‘திராவிடன்’ வ.வசந்தகுமார், நகரச் செயலாளர், அவிநாசி நகரம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### இரண்டாவது பொதுத் தேர்தல்!

1923-ஆம் ஆண்டு நவம்பரில் சென்னை மாகாணத்துக்கான இரண்டாவது தேர்தல் நடைபெற்றது. முதல் தேர்தலைப் போலவே இரண்டாவது தேர்தலிலும் நீதிக்கட்சியே பெருவாரியான இடங்களைக் கைப்பற்றியது. ‘அமைச்சரவையில் தமிழர்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் தரப்படவில்லை’ என்ற குறை அப்போது எழுந்தது. இதையடுத்து, நீதிக்கட்சித் தலைவர் சர் பிட்டி.தியாகராயர், பனகல் அமைச்சரவையில் சர் கே.வி.ரெட்டி நாயுடுவை நீக்கிவிட்டு, திவான்பகதூர் டி.என்.சிவஞானத்தை அமைச்சராக நியமித்தார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131